25 டிசம்பர் 2022

Newbec

NEW WAY OF BEING CHURCH

கிறிஸ்துபிறப்புப் பெருவிழா

மண்ணுலகிற்கு உப்பும் உலகிற்கு ஒளியும்: ஒன்றிப்பு, பங்கெடுப்பு, மறைத்தூது

# கடவுளின் கிறிஸ்மஸ் கதை

மாதாந்திர கருப்பொருள்:
**கிறிஸ்மஸ் காலம்**
(25 டிசம்பர் – 1 ஜனவரி 2023)



இஸ்ரயேலின் வரலாறு முழுவதும் கடவுளுக்கும் மனிதகுலத்திற்கும் இடையிலான உடன்படிக்கை என்பது எப்போதும் ஒரு பலியோடு இணைந்துதான் வந்துள்ளது. இதுபோல மனிதகுலத்திற்காக கடவுள் செய்த மாபெரும் பலியை இங்கு நாம் காண்கிறோம். இது கடவுளின் கிறிஸ்மஸ் கதை.

ஒரு விவசாயி, பலத்த காற்றுடன் கூடிய பனிப்புயல் காரணமாக, தம்முடைய பண்ணையிலேயே தங்க நேர்ந்தது. அந்த நேரத்தில் காட்டுவாத்துக்கூட்டம் திசைதெரியாததால், இலக்கில்லாமல் சுற்றித்திரிந்து தங்குவதற்கு இடம் தேடுவதைக் கண்டார் அந்த வாத்துக்கூட்டம் ஒரு பாதுகாப்பான இடத்தில் தங்குவதற்காக தம்முடைய கொட்டகையின் கதவுகளைத் திறந்தார். ஆனாலும் அந்த வாத்துகள் கொட்டகைக்குள் வந்து அமராமல் அங்குமிங்கும் அலைமோதிக்கொண்டிருந்தன. கைகளை அசைத்து அவற்றின் கவனத்தைக்கவர முயன்றார். ஆனால் அந்த வாத்துக்கூட்டம் அவரையோ அவரது கொட்டகையையோ கவனிக்கவில்லை. அவர்களைக் காப்பாற்றுவதற்கான வழியைப் பற்றி அவர் யோசித்தார். திடிரென வாத்துகளைக் காப்பாற்ற ஒரு யோசனை தோன்றியது. காட்டு வாத்துகளின் கூட்டத்தை கொட்டகைக்குள் வழிநடத்த அவர் தனது சொந்த வாத்துகளை கொட்டகையிலிருந்து விடுவித்தார். இந்த காட்டு வாத்துகள் அவருடைய வாத்துகளைப் பின்தொடர்ந்து கொட்டகைக்குத் திரும்பியது. பனிப்புயல் முடியும்வரை வாத்துகள் பாதுகாப்பான இடத்தில் தங்கி ஓய்வெடுத்தன.

பனிப்புயலில் சிக்கிய காட்டு வாத்துகளைக் காப்பாற்றிய விவசாயியின் கதை தான் நமது கிறிஸ்மஸ் கதை. காட்டுவாத்துகளைப் போல எங்கு செல்வதென்று தெரியாமல் தவித்த நம்மை, மீட்பின் பாதைக்கு அழைத்துவரவே கடவுள் தம் ஒரே மகனை இந்த உலகிற்கு அனுப்பினார். கடவுள் மனிதனாக வந்து, மனித குலத்தையும் தெய்வீகத்தையும் ஒன்றாக இணைத்தது தான் கிறிஸ்மஸின் உண்மையான அர்த்தம். மனிதகுலம் பாதுகாப்பான மீட்பை அடையவேண்டும்; அவரிடம் மீண்டும் திரும்ப வேண்டும் என்ற உண்மையான அர்த்தத்தை நம் உள்ளத்தில் தியானிப்போம்.

பாபிலோனிய அடிமைத்தளையிலிருந்து விடுவிக்கப்பட்டு, இஸ்ரயேல் மீண்டும் நிலைநாட்டப்படும் என்ற செய்தியை இன்றைய முதல் வாசகத்தில் இறைவாக்கினர் எசாயா எடுத்துரைக்கின்றார். பாவத்திலிருந்து மீட்பும், கிறிஸ்து தரும் நிலைவாழ்வையும் பற்றி முன்னறிவிக்கின்றார். சுதந்திரத்தை முழுமையாக அனுபவிக்கும் முடிவில்லா விண்ணக வாழ்க்கையைப் பற்றியும் என்றென்றும் நிலைத்திருக்கும் இஸ்ரயேலின் கடவுளின் அரசைப் பற்றியும் முன்னறிவிக்கின்றார்.

இன்றைய இரண்டாம் வாசகத்தில், வார்த்தையான கடவுளின் மகனின் மூலம் நாம் கொண்டிருக்கும் தொடர்பைப் பற்றிப் பேசுகிறார். படைப்புகள் அனைத்திலும், தந்தையின் பிரசன்னம் மகனின் வழியாக படைப்புகள் அனைத்திலும் வீற்றிருப்பதைப் பற்றிப் பகிர்ந்து கொள்கின்றார்.

**மனனம் செய்ய இந்த வார வசனம்:**

...கடவுள் இவ்விறுதி நாள்களில் தம் மகன் வழியாக நம்மிடம் பேசியுள்ளார்.

(எபிரேயர்: 1:1-6)

**இன்றைய வாசகங்கள்:**

எசாயா 52: 7-10;
திருப்பாடல்: 98: 1-6;
எபிரேயர்: 1: 1-6;
யோவான்: 1:1-18(அ) 1:1-5, 9-14.

INTERNAL CIRCULATION ONLY
BUL 52/2022

*Published by:* Peninsular Malaysia Pastoral Team
api@archkl.org